www.padippakam.com

# ஒன்றுபடுவோம் வெற்றிபெறுவோம்.

தமிழீழத்தை வென்றெடுப்பதற்கு இயக்கங்களின் ஒற்றுமையும், புரிந்துணர்வும் அவசியமானது என்பதை உணர்ந்து 1982ல் இருந்து இயக்கங்களின் ஒற்றுமைக்காக எமது கழகம் பல முன்முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் இம்முயற்சிகள் கைகூடாமற்போனதை அனைவரும் அறிவர்.

இவ்வடிப்படையிலேயே 1982ல் நடைபெற்ற ஒற்றுமை முயற்சிகளிலும், அதன்பின்னர் 1983ல் நடைபெற்ற ஒற்றுமை முயற்சிகளிலும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் முன்னின்றதை விடுதலை இயக்கங்கள் உள்ளிட்டு அனைவரும் அறிவர். ஆனால் இம்முயற்சிகள் தோல்வியடைந்தாலும், இதன் தொடர் விளைவுகளின்பயனாக 1984 பெப்ரவரி 19ந்திகதி தமிழீழ விடுதலை இராணுவமும் (ரெலா) தமிழீழ மக்கள்விடுதலைக்கழகமும் குறைந்தபட்ச பொதுவேலைத்திட்ட அடிப்படையில் ஒரு உடன்படிக்கைக்கு வந்தன. இதேபோல்-தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஈழப்புரட்சியமைப்பு (ஈரோஸ்) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ-பி.ஆர்.எல்.எவ்) ஆகிய மூன்று இயக்கங்களும் 1984 ஜூலையில் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். இவ்வொற்றுமை முயற்சிப்பொழுதெல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒதுங்கியிருந்தே வந்தது. பின்னர் ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்-கூட்டமைப்பும், தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம்-தமிழீழ விடுதலை இராணுவம் சேர்ந்த கூட்டமைப்பும் 1984 செப்டம்பரில் இருந்து ஒரு பொது உடன்பாட்டுக்குவருவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதையும் யாவரும் அறிவர். இக்கால கட்டத்தில் இயக்கங்களுக்கிடையிலான முரன்பாடுகளை இப்பேச்சுவார்த்தைகளில் தீர்த்துக்கொண்டு, தொடர்ந்து ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை 1984ம்-ஆண்டில் ஆகஸ்ட்மாதம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடனும், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பொது உடன்பாட்டுக்கு வரவேண்டுமென்ற வரலாற்றுத்தேவையை தெரிவித்திருந்தோம். இந்த அடிப்படையில் அப்போ தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் விரிவுரையாளர். நித்தியானந்தன் தலைமையில் தமிழீழவிடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை எமது தோழர்களும்-செயலதிபரும் இருதடவைகள் சந்தித்துப்பேசியுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகள் இடையில் முறிந்த நிலையிலும்கூட தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்காக தமிழீழ விடுதலைஇராணுவம்- தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம் சேர்ந்த கூட்டமைப்பு சார்பில் 30-10-1984ல் அழைப்பு விட்டிருந்தோம். இவ்வழைப்புக்கு எவ்வித பதிலும் கிடைக்காதபடியால் அதுதொடர்பான நினைவூட்டல்கடிதங்களையும் அனுப்பிவைத்திருந்தோம். அவற்றுக்கும் பதிலேதும் கிடைக்கவில்லை. இதே காலகட்டத்தில் ரெலோ, ஈரோஸ்,-ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்ந்த கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அழைப்பு விட்டதாகவும்-பதிலேதும் கிடைக்கவில்லையெனவும் எமது சந்திப்பின்போது மூன்று இயக்கங்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்

படிப்பகம்

டிருந்த மூன்று இயக்கங்களின் கூட்டமைப்பும், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம்-தமிழீழ விடுதலை இராணுவம் சேர்ந்த கூட்டமைப்பும் சேர்ந்து ஐந்து அமைப்புக்களுமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளுமாறு 4-2-1985ல் அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கும் எவ்விதபதில்களும் கிடைக்காதபடியால் அதற்குரிய நினைவூட்டல் அனுப்பிவைக்கப்பட்டது. இவ்வாறு ஐந்து இயக்கங்களும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய மூன்று இயக்கங்களும் தங்கள் கூட்டமைப்புக்கு 'ஈழத்தேசியவிடுதலைமுன்னணி' எனப்பெயரிட்டனர். இவ்வேளை தமிழர் விடுதலைக்கூட்டணியாலும் விடுதலை இயக்கங்களைப் பேச்சுவார்த்தைக்குவருமாறு தனித்தனி இயக்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதே போன்ற முயற்சி தமிழர் விடுதலைக்கூட்டணியால் முன்னரும் செய்யப்பட்டவேளை- தமிழீழ விடுதலைப்புலிகளைத்தவிர ஏனைய இயக்கங்கள் தமிழர்விடுதலைக்கூட்டணியினரை தமிழ் தகவல் நிலையத்(இந்தியா)தில் சந்தித்தனர். இம்முயற்சியும் இடைநடுவில் முறிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது முறை இயக்கங்களுக்கு தமிழர்விடுதலைக்கூட்டணியால் விடுக்கப்பட்ட அழைப்பு எமக்கு கிடைத்தபோது ஐந்து இயக்கங்கள் பேச்சுவார்த்தையில் - ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். ஆகவே இப்பேச்சுவார்த்தைகளில் தமிழர்விடுதலைக்கூட்டணியினரின் அழைப்புப்பற்றி பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கும்(த.வி.கூ)தேசிய விடுதலையில் பங்கு உண்டென்றும் அதன்அடிப்படையில் அவர்களின் அழைப்பை ஐந்து இயக்கங்களும்- ஏற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1985 ஜனவரி 1ம்திகதி தமிழர்நல மருத்துவமனையில் தமிழர்விடுதலைக்கூட்டணியினருடன் ஐந்து இயக்கங்களும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டோம். இந்தப்பேச்சுவாத்தையின் போதும் தமிழீழ விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளவில்லை. தொடர்ந்து இரண்டாவது தடவையாக இப்பேச்சுவாத்தை நடைபெறும்வேளை எமது இயக்கத்தின் செயலதிபர்- தோழர்:முகுந்தனுல் முன்மொழியப்பெற்ற கருத்தை ஏற்று அன்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட ஆறு இயக்கத்தலைவர்களுமாகச்சேர்ந்து தமிழீழவிடுதலைப்புலிகளையும் கலந்துகொள்ள 22-2-1985ல் அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வழைப்பில் தமிழீழ விடுதலை இராணுவம், தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சியமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய இயக்கத்தலைவர்கள் ஒப்பமிட்டனர். இந்த அழைப்பையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் வழமைபோல் புறக்கணித்துவிட்டனர். இந்நிலையில் 27-2-85ல் நடைபெற்ற ஐந்து இயக்கக்கூட்டத்தில் மேலும் தமிழர்விடுதலைக்கூட்டணிதொடர்பான கூட்டமைப்புப் பற்றி பரிசீலிக்கப்பட்டு பெப்ரவரி 28ந்திகதி காலை ஈழத்தேசியவிடுதலை முன்னணிக்கட்டிடத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் ஐந்து இயக்கங்களும் பேச்சுவாத்தைகளில் ஈடுபட்டன. அப்போது மலையக மக்கள்பற்றியும், இஸ்லாமிய மக்கள்பற்றியும் பொதுவாகப்பேசப்பட்டதோடு தமிழீழத்தின் எல்லைகள், போராட்ட முறைகள் பற்றியும் பேசப்பட்டு ஒரு பொது

www.padippakam.com

உடன்பாட்டுக்கு வந்ததோடு ஆறு இயக்கங்களும் ஒன்றுசேர்ந்து தொடர்ந்து பேசுவதெனவும் ஆறு இயக்கங்களும் சேர்ந்த கூட்டமைப்புக்கு தற்காலிகமாக "விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு" எனப்பெயரிடுவதெனவும், இக்கூட்டமைப்பினால் பொதுவாக கூட்டுறவு, தனியார் இல்லங்களில், கடைகளில் நடைபெறும் கொள்ளைகளை நிறுத்துமாறு துண்டுப்பிரசுரம் வெளியிடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டு அடுத்த கூட்டம் 8-2-85ல் நடைபெறுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்து மீண்டும் நினைவூட்டல்கடிதம் அனுப்புவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டமைப்புக்குப் பொது அமைப்பாளராக முகிலனும் தெரிவு செய்யப்பெற்றிருந்தார். பின்னர் 8-2-85ல் நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் ஈழத்தேசியவிடுதலை முன்னணி தமிழீழவிடுதலைப்புலிகளுடன் பேச்வார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், ஒரு சிறிகால அவகாசத்துடன் ஆறு இயக்கக்கூட்டமைப்பைக்கூட்டுவதாகவும், 29-3-1985ல் ஆறு இயக்கங்களின் அமைப்பாளரிடம் இருந்து ஒரு கடிதமும், பேச்சுவார்த்தைகளை ஒத்திவைத்துள்ளதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் 19-3-85 நாளிட்டு ஈழத்தேசிய விடுதலை முன்னணி செயலாளரிடம் இருந்து ஒரு கடிதமும் கிடைக்கப்பெற்றோம். இதேவேளை எமது 21-3-85 நாளிட்ட ஈழத்தேசிய விடுதலை முன்னணிக்கு எழுதிய கடிதத்தில், தமிழீழ விடுதலை இராணுவம், தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம், ஈழப்புரட்சியமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களின் கலந்துபேசும் கூட்டத்தைக்கூட்டுமாறு கேட்டிருந்தோம். இதன் பிரதிகள் சார்ந்துள்ள இயக்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பதிலேதும் கிடைக்கவில்லை. இத்துடன் கடந்த ஆறுமாதங்களாக நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் பின்தள்ளப்பட்டன.

எனினும் இற்றைவரைகாலமும் எந்தவித இணைவு முயற்சிகளிலும் கலந்துகொள்ளாது இருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடன் பேச முன்வந்ததை நாம் வரவேற்கின்றோம். இயக்கங்களின் இணைவுத்தேவையின் வரலாற்று உண்மையைப்புரிந்துகொண்டு குறைந்தபட்ச ஒருமைப்பாட்டுக்காவது வந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வொருமைப்பாட்டுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் சார்பில் தோழர் ஸ்ரீ சபாரெத்தினம் எடுத்துக்கொண்ட முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். இவ்வொருமைப்பாடு வளர்ச்சியுற்று சரியான வேலைத்திட்ட அடிப்படையில் இவ்வியக்கங்கள் ஒருமைப்படவேண்டுமென்விரும்புகின்றோம். இதேவேளை தமிழீழ விடுதலை இராணுவம்-தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம் கூட்டமைப்பு தனது ஒருவருட பூர்த்தியில் பரஸ்பரம் புரிந்துகொண்டு, சரியானவேலைத்திட்டத்தின் கீழ் இன்று "தமிழீழ ஜனநாயகவிடுதலைக்கான-கூட்டமைப்பு" என்ற பொது அமைப்பின்கீழ் வந்துள்ளோம். தொடர்ந்து தமிழீழ ஜனநாயக விடுதலைக்கான கூட்டமைப்பு, ஈழத்தேசியவிடுதலை முன்னணியுடன் (நாலு இயக்கங்கள்) பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு பொதுவேலைத்திட்டத்தை வகுத்துக்கொள்ள முயற்சிகள் செய்வோம்.

www.padippakam.com

ஒற்றுமையே எமது விடுதலையை துரிதப்படுத்த அவசியமானதென்பதை கடந்த இரண்டுவருடங்களுக்குமேலாக நாம் வலியுறுத்திவந்துள்ளோம். ஒற்றுமையென்பது பத்திரிகை அறிக்கைகள்விடவும், வெளிநாட்டுப்பிரச்சாரத்துக்கும், நிதிசேகரிப்புக்கும் அல்ல. அது உண்மையான விடுதலைக்கானதாக இருக்கவேண்டும். அவ்வகையில் ஸ்ரீ லங்கா இராணுவத்தை எதிர்த்துப் போராடுகின்றவிதத்தில் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும். இதுவே விடுதலையை முன்தள்ளிச் செல்லும். அப்போ எமது ஒன்றுபட்ட தாக்குதல்களுக்கு எதிரி மகம் கொடுக்காது பின்வாங்குவான்.

எமது போராட்டமானது திட்டமிட்ட அடிப்படையில் எமது தாயக மண்ணை விடுவித்து அதன் எல்லைகளைப்பாதுகாக்கக்கூடிய வகையில் பூரணத்துவமுள்ள ஒரு வேலைத்திட்டத்தில் செயற்படுவதற்குத்தான் ஒற்றுமை அவசியமாகின்றது. இப்படியான ஒற்றுமையைத்தான் நமது கழகம் விரும்புகின்றது. இந்த அடிப்படையில்தான் நாம் மற்றய அமைப்புக்களுடன் ஒன்றுபட முயற்சிகள் செய்துவருகின்றோம். ஒற்றுமையென்பது ஒரு சில குழுக்களோடு மட்டுமல்ல தமிழீழத்திற்காகப்போராடுகின்ற அனைத்துத் தேசிய சக்திகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இந்த அடிப்படையில் தமிழீழ தேசியவிடுதலைக்காக போராடுகின்ற எந்தவொரு அமைப்புடனும், குழுக்களுடனும் நாம் ஒன்றிணைந்து ஒரு பொது யுத்த தந்திரத்தைக் கையாண்டு எதிரியை எமது தமிழீழப்பூமியில் இருந்து விரட்டிட தமிழீழ மக்கள்விடுதலைக்கழகம் என்றும் தயாராகவுள்ளது.

தேசிய அரசியற் சபை,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம். 12-4-1985.

www.padippakam.com